# தேசியம்
THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 39 | 27.04.2023 (வியாழக்கிழமை) | சித்திரை மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00




## யாழ். நெடுந்தீவை உலுக்கிய படுகொலை!

# 100 வயது மூதாட்டியும் பலி

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் நகைகளை அபகரிக்கும் நோக்குடன் கொடூரமாக நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மூதாட்டி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது,

5ம் பக்கம்

## எதிர்க்கட்சி உறுப்பினர்களை அச்சுறுத்தும் அரசாங்கம்

### குற்றஞ்சாட்டிய கஜேந்திரகுமார் !



நாடு வங்குரோத்து நிலைக்கு செல்வதற்கு முன்னமே சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்திருந்ததாக கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

5ம் பக்கம்



## குருந்தூர் மலை வழக்கு தொடர்பில் அரசியல்வாதிகளுக்கு கோரிக்கை



கடந்த காலத்தில் காட்டிய அர்ப்பணிப்பு போன்று எமது தமிழ் சட்டதரணிகள் சிறப்பான சமர்ப்பணங்களை முன்வைக்க வேண்டுகின்றோம் என தென்கயிலை ஆதீன குரு முதல்வர் அகத்தி அடிகளார் தெரிவித்துள்ளார்.

5ம் பக்கம்

## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக குரல் கொடுக்க இணைவோம்!

LET'S JOIN TO VOICE AGAINST NEW ANTI-TERRORISM ACT




29.04.2023, 9.00AM
Infront of Kilinochchi Public Market

5ம் பக்கம்

KILINOCHCHI MEDIA FORUM

Supported by : NECC

### கிளிநொச்சி ஊடக அமையம் அழைப்பு

அரசினால் தற்போது முன் வைக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப்படும் ஊடகத்துறை மிக மோசமாக நசுக்கப்படும் என்ற அச்சம் காணப்படுகிறது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தங்களது கடமைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். எனவே குறித்த சட்ட மூலத்திற்கு எதிராக குரல கொடுக்க அனைவரையும் ஒன்றிணையுமாறு கிளிநொச்சி ஊடக அமையும் அழைப்பு விடுத்துள்ளது.

# குருந்தூர்மலையில்

## நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரை

## இன்று நேரடி விஜயம் செய்த நீதவான்



முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயதினர் சார்பில் நீதிமன்றில் மன்றில் முறையீடு செய்யப்பட்ட வழக்கு விசாணைகள் இன்று(27) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது

5ம் பக்கம்


TRINCOMALEE - JAFFNA
NETHUGHA
SUPER LINE TRAVELS
Super Luxury Air Suspension Bus Services
Luxury A/C Coach with Comfortable Seats,
Free Wi-Fi & Washroom Facilities.

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கும்...
திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும்...
TRINCOMALEE 4.00am
JAFFNA 3.30pm
TELEPHONE
070 771 1101 | 077 771 1101

தேசியம் THESIYAM
ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339

மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com

இணையம் : www.thesiyamnews.com

## சிங்கள பேரினவாதிகளிடம் இருந்து சுதந்திரம் பெற முடியாமல்தவிக்கும் தமிழ் தேசிய இனம்

ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற போதிலும் இந்த கேடுகெட்ட சிங்கள பேரினவாதிகளிடம் இருந்து தமிழ் தேசிய இனம் சுதந்திரம் பெற முடியாமல் தனது இருப்புக்காக தொடர்ந்து போராடி வருகின்றது. வாழும் காலம் எல்லாம் சிங்கள மக்களைப் போல் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை கொண்ட ஒரு தேச அங்கீகாரத்திற்குரிய மக்களாக தமிழ் மக்களும் உள்ளார்கள் என்பதை மிதவாத தலைமைகள் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு வலியுறுத்தி வந்த போதும் அதனை அவர்கள் ஏற்க மறுக்கின்றனர்.

தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறையும், தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்கும் செயற்பாடும், இனசுத்திகரிப்பும் இந்த நாட்டிலே தொடர்ந்து அரங்கேறியதால் தம்மை பாதுகாத்து கொள்ளவும், தமது இனத்தின் இருப்பை பாதுகாக்கவும் இளைஞர், யுவதிகள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது. தமிழ் மக்களின் நிலங்களையும், கலாசார பண்பாடுகளையும், தமிழ் தேச அங்கீகாரத்தையும் சிதைத்து அழிக்கின்ற செயற்பாடுகளையே சிங்கள பேரினவாத அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. அதன் ஒரு அங்கமாகவே குருந்தூர் மலை விவகாரமும் காணப்படுகின்றது.

குருந்தூர் மலை பிரதேசத்தில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் முன்னர் தொல்பொருட் சின்னங்கள் காணப்பட்டன. இந்த பகுதியில் ஆதி சிவன் ஆலயம் இருந்தது. இவ்வாறு நீண்டகாலமாக மக்கள் வழிபாடுகளை மேற்கொண்டு வந்த நிலையில் சிங்கள பேரினவாத பௌத்த பிக்குகள் சிலர் அவ்விடத்தை பார்வையிட்டு அந்த பகுதியில் பௌத்த ஆலயம் இருந்தது என்று தெரிவித்து இந்து ஆலயத்தை அகற்றி பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ் மக்கள் சார்ந்த வரலாற்று தகவல்களையும், பொக்கிசங்களையும் பாதுகாக்க வேண்டிய தொல்பொருள் திணைக்களமும், இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டிய படைத்தரப்பும் பிக்குகளுடன் இணைந்து பௌத்த சின்னங்களையும், புத்தர் சிலைகளையும் தமிழர் தாயகப் பகுதிகளில் நிறுவும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றன.

சிங்கள மக்கள் வாழாத அந்த பகுதியில் உள்ள மலையில் சிங்கள மக்கள் தான் வழிபட்டார்கள் என்பதை எவ்வாறு ஏற்க முடியும்? தமிழ் மக்களது அடையாளத்தையும், கலாச்சார பண்பாட்டையும் வெளிப்படுத்தும் ஆதி சிவன் வழிபாட்டு நடவடிக்கைக்கு பௌத்த பிக்குகள் குழப்பத்தை ஏற்படுத்தி, வழிபாட்டு விக்கிரகங்களை அகற்றிய நிலையில் குறித்த விவகாரம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் சார்பில் நீதிமன்றில் முறையீடு செய்யப்பட்டு வழக்கு விசாரிக்கப்பட்டது. இதன்போது அவ்வாறு நீதிமன்ற கட்டளைகளை மீறி கட்டுமானப்பணிகள் எதுவும் நடக்கவில்லை என தொல்பொருள் திணைக்களம் மற்றும் அரச சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

இதனை ஆலய தரப்பு சட்டத்தரணிகள் எதிர்த்திருந்த நிலையில் பல மணி நேர வாத விவாதங்களின் பின்னர் நீதிபதி ரி.சரவணராஜா அன்று குருந்தூர் மலைக்கு நேரடியாக சென்று நிலமைகளை பார்வையிட்ட பின்னர் கட்டளை வழங்க வழக்கு விசாரணைகளை ஆடி மாதம் நான்காம் திகதிக்கு தவணையிட்டுள்ளார்.

ஜனநாயக நாட்டில் சட்டமும் நீதியும் அனைத்து தரப்பினருக்கும் சமனாக இருக்க வேண்டும்.சிங்கள பௌத்த மேலாண்மை வாத அடக்கு முறை சிந்தனையில் இருந்து தென்னிலங்கை ஆட்சியாளர்களும், அரசின் ஆக்கிரப்பு முகவர்களாக செயற்படும் தொல்பொருள் திணைக்களம், வனஇலாகா திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை போன்ற அரச திணைக்களங்களும், படைத்தரப்பும் மாறாத வரை இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. இன்று இலங்கையில் பௌத்தம் தன்னிலையில் தடம் மாறி ஆக்கிரமிப்பு அடையாளமாகவும், தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான அடையாளமாகவும் மாறியுள்ளது. இதனை தென்னிலங்கை புரியாத வரை வீழ்ந்திருக்கும் இந்த நாட்டை மீள கட்டியெழுப்ப முடியாது என்பதே நிதர்சனமான உண்மை.

ஆசிரியர் ■ யாழ்ப்பாணம்

# வடக்கில் குடியேறும் மற்றுமோர் புத்த விகாரை



இன்று (27.04.2023) தையிட்டிப் பகுதியில் புத்த விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வொன்று இடம் பெற்றுள்ளதாகவும். பெருமளவான இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தையிட்டில் அமைக்கப்பட்டுள்ள குறித்த விகாரை யாழிலேயே அமைக்கப்பட்டுள்ள மிக உயரமான விகாரை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழர் தாயகம் எங்கும் இலங்கை அரசாங்கம் புத்த விகாரைகளை அமைத்து தமிழரின் பூர்வீக நிலங்களை கையகப்படுத்தி, தமிழரின் இருப்பை முற்றுமுழுதாக இல்லாது செய்யும் முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது.

அந்த வகையில், வடதாயகமான யாழின் நாவற்குழிப் பகுதியில் அண்மையில் ஒரு புத்த விகாரை அமைக்கப்பட்டு அதற்கு கலசம் வைக்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இதேவேளை கச்சதீவில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையை குறித்த இடத்திலிருந்து அகற்றி விட்டதாக இலங்கை கடற்படை நேற்றைய தினம் யாழ். ஆயர் இல்லத்திற்கு அறிவித்திருந்தது. ஆகவே நேற்றைய தினம் கச்ச தீவிலிருந்து அகற்றப்பட்ட புத்தர் சிலை இன்று யாழில் பிரதிட்டை செய்யப்படலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. தமிழ் மக்களின் காணிகள் வலி வடக்கில் குறிப்பிட்ட அளவு விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்று வரை முற்று முழுதாக விடுவிக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில், இலங்கை படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களில் தமிழர் அடையாளங்களை அழித்து அங்கு பௌத்த சின்னங்களை உருவாக்கி பிரதிஷ்ட்டை செய்யும் செய்பாடுகள் மறைமுகமாகவும் நேரடியாகவும் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

உள்நாட்டு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# சீனா வசமாகி வரும் தமிழர் பிரதேசங்கள்: சிறீதரன் காட்டம்



தமிழர்களின் பிரதேசங்களை சீனாவுக்கு வழங்க அரசாங்கம் தீவிர கவனம் செலுத்துகின்றது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (26.04.2023) உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அரசின் இந்த தமிழர் விரோத நட வடிக்கைக்கு சர்வதேச நாணாய நிதியம் ஒத்துழைப்பு வழங்குகின்றதா என நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையிடம் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழர்களின் காணிகளை சீனாவுக்கு வழங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை எதிர்வரும் நாட்களில் பகிரங்கப்படுத்துவேன் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# யாழ் பேருந்தில் அரச உத்தியோகஸ்தரான பெண்ணிடம் சேட்டை துவைத்தெடுத்த பயணிகள்!



யாழ்ப்பாணம் - நாவற்குழிப் பகுதியில் நேற்று காலை தனியார் பஸ்சில் வந்த நடுத்தவயதான நபர் பயணிகளால் நையப்புடைக்கப்பட்டு இறக்கிவிடப்பட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. கீழே இறக்கப்பட்ட நபர் மூக்கால் இரத்தம் வழிந்து முகம், கண்கள் வீங்கிய நிலையில் நீண்ட நேரம் தெருவோரம் இருந்த பின்னர் அங்கிருந்து சென்றதாக தெரிய வருகின்றது.

இது தொடர்பாக அப்பகுதியில் நின்றவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் பெண் அரச ஊழியர் அத்து மீறி தொட்டதாக கூறியே குறித்த நபர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறினார்கள்.
குறித்த நபரை பொலிசாரிடம் ஒப்படைக்குமாறு அங்கு நின்றவர்கள் பயணிகளிடம் கூறிய போதும் அனைவரும் தமது பயணம் தாமதம் ஏற்படக்கூடும் என்பதனால் நடுவழியில் இறக்கிவிட்டதாக தெரியவருகின்றது.

அதேவேளை பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட நபர் வைத்தியசாலை ஊழியர்கள் அணியும் ஆடையுடன் காணப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# வெடுக்குநாறி மலையில் அகற்றப்பட்ட சிலைகளை மீண்டும் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு!



வவுனியா வெடுக்குநாரி மலையிலிருந்து அண்மையில் அகற்றப்பட்ட சிலைகளை மீண்டும் அங்கு வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. வவுனியா நீதவான் நீதிமன்றத் தில், நீதவான் தேவராசா சுபாஜினி முன்னிலை யில் குறித்த வழக்கு இன்று(வியாழக்கிழமை) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், "வெடுக்குநாரி மலையில் வழிபாடுகளை மேற்கொள்ள ஏற்கனவே நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், நேற்றைய தினம் அங்கு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும், விக்கிரகங்கள் இன்றி அங்கு வழிபாடுகள் நடத்தப்பட்டமை தொடர்பிலும், வெடுக்குநாரி மலையிலிருந்த திருவுருவ சிலைகள் மற்றும் பூஜை பொருட்கள் ஆகியன பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சமர்பணங்களை ஆராய்ந்த வவுனியா நீதவான், வெடுக்குநாரி மலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட விக்ரகங்களை அதே இடத்தில் மீண்டும் பிரதிஸ்டை செய்யுமாறும், பூஜை பொருட்களை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் திருவுருவச் சிலைகள் மீள பிரதிஸ்டை செய்யப்பட வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், பூஜை வழிபாடுகளுக்கு எவ்வித இடையூறுகளையும் விளைவிக்காதிருப்பதற்கும், அங்கு பாதுகாப்பு மேற்பார்வைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கும் பொலிஸாருக்கு நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டுள்ளது.

அத்துடன், வெடுக்குநாரி மலையிலிருந்த விக்கிரகங்கள் சேதப்படுத்தியமையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதை துரிதப்படுத்துவதற்கும் பொலிஸாருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது." எனத் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு செய்திகள் ■ வவுனியா

## அரச மருத்துவமனைகளில் 112 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு!



அரச மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் 112 வகையான மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இன்று (வியாழக்கிழமை) உரையாற்றிய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக அரச மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் ஆயிரத்து 347 வகையான மருந்துகளில், 150 வகையான மருந்துகளுக்கு ஏற்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இலங்கைக்குத் தேவையான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் 50 பில்லியன் ரூபாய் அதாவது 13.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகின்றதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு செய்திகள் ■ கொழும்பு

## இரண்டரை வயது குழந்தையின் மீது தாக்குதல் தமிழரசு கட்சி உறுப்பினர் ஒருவர் கைது!



மட்டக்களப்பு,வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மற்றும் அவரது இரண்டரை வயது மகள் ஆகியோர் மீது தாக்குதல் நடாத்தியது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் போரதீவுப்பற்று இணைப்பாளர் இன்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ாக்குதல் நடாத்தியதாக தெரிவிக்கப்படும் தமிழரசு கட்சியின் போரதீவுப்பற்று இணைப்பாளர் வெல்லாவெளி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

25-04-2023 வடகிழக்கில் இடம் பெற்ற ஹர்த்தால் நாளில் இவர் தனது வர்த்தக நிலையத்தினை திறந்து வைத்திருந்ததாக தெரிவித்து முகப்புத்தகத்தில் இடப்பட்டிருந்த பதிவு ஒன்று தொடர்பிலேயே இவர் குறித்த தாக்குதலை நடாத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

இவர் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போரதீவுப்பற்று பிரதேசசபைக்கு போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு செய்திகள் ■ மட்டக்களப்பு

## வலயக்கல்வி அதிகாரிகள் பாய்ச்சல்: மன்னாரில் பாடசாலை அதிபர் வைத்தியசாலையில்!

மன்னார் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை(25) விஜயம் செய்த மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் 03 பேர் குறித்த பாடசாலை அதிபருடன் வாய் தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் குறித்த அதிபருக்கு திடீரென உடல் ரீதியாக உபாதை ஏற்பட்ட நிலையில் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சென்ற நிலையில்,குறித்த அதிபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் மூன்று பேர் நேற்று முன்தினம் (25) செவ்வாய்க்கிழமை மன்னார் எழுத்தூர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு விஜயம் செய்துள்ளனர். அங்கு சென்ற குறித்த மூன்று அதிகாரிகளும் இவ்வருடம் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய உள்ளதாக தெரிவித்த நிலையில் தரம் 11 வகுப்பறைக்குச் சென்றுள்ளனர். பின்னர் குறித்த வகுப்பறையில் கல்வி கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவரை வெளியேற்றியுள்ளனர். பின் அங்கு சென்ற குறித்த அதிபரையும், அவர்கள் அங்கிருந்து வெளி யேற கூறியுள்ளனர்.

இதனால் அதிபருக்கும், குறித்த அதிகாரிகள் மூவருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது என தெரிய வருகிறது. பின்னர் அதிபர் அங்கிருந்து சென்று அதிபர் அலுவலகத்தில் தனது கடமைகளை மேற்கொண்டுள்ளார். இதன் போது குறித்த மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் அதிபர் அலுவலகத்திற்குச் சென்று பல்வேறு ஆவணங்களை கோரி அவருக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர். இதனால் அதிபர் உள ரீதியாக பாதிப் படைந்துள்ளார்.

குறித்த பாடசாலைக்குச் சென்ற மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் மூவரில் ஒருவரின் மனைவியை குறித்த பாடசாலைக்கு அதிபராக நியமனம் செய்ய முயற்சிகள் இடம் பெற்று வருவதாகவும், அதன் காரணமாகவே தொடர்ச்சியாக குறித்த அதிபருக்கு மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகளினால் தொடர்ச்சியாக பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் ஒரு தரப்பு குற்றம்சாட்டுகிறது. இவ் விடயம் குறித்து மாகாண ரீதியில் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

உள்நாட்டு செய்திகள் ■ மன்னார்

# புலி என அமைச்சர் கூறியது தவறு சாணக்கியனுக்கு கைகொடுத்த அமைச்சர் ஜீவன் தொண்டமான்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை புலி என, உயரிய சபையில் அமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்ததை வன்மையாக கண்டிப்பதாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அதி உயர் சபையாக கருதப்படுகின்ற நாடாளுமன்றத்தில் எதிரணி உறுப்பினரை அமைச்சர் கொட்டியா என விமர்சித்தமை தவறான விடயம், நாடாளுமன்றத்தில் சபை நாகரீகம் பின்பற்றபபட வேண்டும். ஒரு உறுப்பினரின் இனத்தை வைத்து அவரை விமர்சிப்பது ஏற்புடைய விடயம் அல்ல என்றும் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி அவசியம் என்ற வகையில் நாளை நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள வாக்கெடுப்பில் ஆதரவு வழங்கவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு செய்திகள் ■ மலையகம்

# நயினாதீவில் புதிய மின் பிறப்பாக்கி குடிநீர் பிரச்சினைக்கும் தீர்வு!

## – அமைச்சர் நடவடிக்கை –



நயினாதீவு பிரதேசத்தில் பழுதடைந்திருந்த மின்பிறப்பாக்கிக்கு பதிலாக சுமார் 300 மெகாவாட்ஸ் உற்பத்தி திறனுள்ள மின்பிறப்பாக்கி ஒன்று புதிதாக பொருத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் இலங்கை மின்சார சபையினால் இந்த மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டள்ளது.

இதன்மூலம், நயினாதீவிற்கு 24 மணித்தியால மின்சார விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், சுழு திட்டத்தினை சீராக செயற்படுத்தி நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகியவற்றுக்கான குடிநீர் விநியோகத்தினை தொடர்ச்சியாக வழங்குவதற்கான வாய்ப்பும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# சாதி பாகுபாடு தொடர்பான முக்கிய சட்டம் – காரணமாகிய தமிழ் பெண்!




அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சாதி ரீதியான பாகுபாட்டைத் தடை செய்யும் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், கலிபோர்னியாவானது டெக் துறையில் முதன்மை இடத்தினை பெறுவதுடன் அங்கும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது.

இவ்வாறான சூழலிலே, கலிபோர்னியா மாகாணத்தில் சாதிய பாகுபாட்டிற்குத் தடை விதிக்கும் மசோதா வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்காவில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டிற்குத் தடை விதித்துள்ள முதல் மாகாணம் என்ற பெருமையினையும் இது பெறுகின்றது.

இந்த சட்டமானது கொண்டவரப்பட காரணம் அமெரிக்காவில் வாழும் ஓசி பிரிவு இந்துக்கள் அங்கு வாழும் ஒரு வகை இந்து மக்களை பின்தள்ளப்பட்ட இந்துக்கள் என இழிவுபடுத்தியும், சாதி பாகுபாட்டினை காட்டியும் துன்புறுத்தி வந்துள்ளனர்.

துன்புறுத்தல் தொடர்பாக புகாரளிக்கப்பட்ட போதிலும் அதனை அமெரிக்க சமூகம் பெரிதாக கண்டுகொள்ளவில்லை.

இதனால் இதற்கெதிராக அங்கு பிரேம் பறையா, தேன்மொழி சௌந்தரராஜன் உள்ளிட்ட பல தலித் போராளிகள் கடுமையாக போராடினார்கள். அவர்களின் போராட்டத்தின் விளைவாக அமெரிக்கர்கள் சாதி வெறியின் தாக்கத்தினை உணர்ந்து கொண்டுள்ளனர்.

இந்த சட்டம் அங்கே கொண்டு வரப்பட முக்கியமான காரணமாக இருந்தவர் தேன்மொழி சௌந்தரராஜன் என்னும் தமிழ் பெண். அவர் இது தொடர்பாக பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், உரையாடல்கள் மற்றும் கலந்துரையாடல் போன்றவற்றை தளராது மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் குறித்த சட்டத்தினை புதிய செனட்டராக தேர்வான ஆயிஷா வஹாப் என்ற இஸ்லாமிய பின்னணி கொண்ட செனட்டர்ரே அறிமுகம் செய்துள்ளார். பல்கலைக்கழகம் தாண்டி தற்போது, ஜாதி பாகுபாட்டை தடை செய்யும் மசோதாவிற்கு கலிபோர்னியா மாகாண செனட் நீதிக்குழு ஒரு மனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

இது தொடர்பாக ஆயிஷா வஹாப், இந்த மசோதா சாதி, குடும்பம் அல்லது வம்சாவளி என எந்தவொரு பாகுபாடுமின்றி வாழ்க்கையை வாழ அனுமதிப்பதுடன், இந்த மசோதா நமது சட்டத்தை விரிவுபடுத்துவதற்கும், பலதரப்பட்ட மக்களைப் பாதுகாக்கவும் உதவும்" எனவும் ஆயிஷா வஹாப் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்திகள் ■ கலிபோர்னியா

# ஞானம் பிறந்திருக்கு சிங்களவர்களுக்கு எய்தவனின் பக்கமே இன்று அம்பு திருப்பியுள்ளது

## ஈரோஸ் அமைப்பின் செயலாளர் நாயகம் ராஜநாதன் பிரபாகரன்!




தமிழ் மக்களுக்கு தீர்வு ஒன்று அவசியம் என்பதை சிங்கள மக்கள் இன்று உணர்ந்துள்ளதாக ஈரோஸ் அமைப்பின் செயலாளர் நாயகமான ராஜநாதன் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இன்று யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதற்கு மிகமுக்கியமான காரணம் அண்மையில் ஏற்பட்ட அரசபயங்கரவாதமே இந்த நிலையியை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளதாகவும் ராஜநாதன் பிரபா கரன் குறிப்பிட்டுள்ளார். இந்த அரச பயங்கரவாதே அன்று தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்ததாகவும் தமிழ் மக்களை பயங்கரவாதியாக்கி அவசரகால சட்த்தை கொண்டுவந்து தமிழ் மக்களை வதைப்படுத்தியருந்தாகவும் ராஜநாதன் பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இன்று எய்தவனின் பக்கமே அம்பு திருப்பியுள்ளதாக ராஜநாதன் பிரபாகரன் சுட்டிக்காட்டுகின்றார்.

உள்நாட்டு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் விடுதலை



பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்ட கிண்ணையடி வாழைச்சேனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் முருகுபிள்ளை கோகிலதாசன் குறித்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இன்று நகர்தல் பத்திரத்தின் மூலம் வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிக்கையின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கிற்கு சிரேஸ்ட சட்டத்தரணி இரட்ணவேல் மற்றும் சட்டத்தரணி ரணித்தா ஆகியோரின் ஆலோசனையின் பேரில் சட்டத்தரணி பி.ஜெசிங்கம் முன்னிலையாகியிருந்தார்.

இவர் முகநூலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வான மாவீரர் நிகழ்வு தொடர்பான பதிவினை பதிவிட்டமை தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 28.11.2020 அன்று வாழைச்சேனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். தொடர்ந்து ஒரு வருடமும் 5 மாதங்கள் மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் 07.03.2022 ஆம் திகதியன்று நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும் இவரது வழக்கு இன்றைய திகதி வரை நடைபெற்றுள்ளது. இவரது விடுதலை தொடர்பாக சர்வதேச உள்ளூர் சமூக அமைப்புக்கள் மற்றும் ஊடக அமைப்புக்கள் குரல் கொடுத்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு செய்திகள் ■ மட்டக்களப்பு

## யாழ். நெடுந்தீவை உலுக்கி...

100 வயது மூதாட்டியான பூரணம் இன்று (27.04.2023) மாலை உயிரிழந்துள்ளார். அவரது இருதயம் செயலிழந்ததனால் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை ஒரே வீட்டில் வசிக்கும் 6 பேர் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் 3 பெண்களும் 2 ஆண்களும் உயிரிழந்தனர். 100 வயதான மூதாட்டி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

குறித்த கொலைச் சம்பவத்தில் நகைகளுடன் தப்பித்த பிரதான சந்தேக நபர் புங்குடுதீவில் வைத்து அன்றிரவே கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கொலை சம்பவத்தின் போது, தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த நாயும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்க்கட்சி உறுப்பினர்க...

இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

குறிப்பாக கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோதே தாம் இதனை வலியுறுத்தியதாகவும் ஆனால் அப்போது எதிர்க்கட்சியில் இருந்த ரணில் விக்கிரமசிங்க அதனை எதிர்திருந்தாகவும் கஜேந்திரகுமார் குறிப்பிட்டள்ளார்.

தற்போது ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் நாடு வங்குரோத்து நிலையை அடைந்த பின்னர், சர்வதேச நாணயநிதியத்திடம் செல்வதை தவிர வேறு வழியில் என குறிப்பிடுவதாக கஜேந்திரகுமார் குற்றம் சுமத்தியிருந்தார்.

சர்வதேச நாணயநிதியத்தின் பணியாளர் மட்ட அறிக்கையை நாடாளுமன்றத்தில் கோரிய போதும் அரசாங்கம் அதனை இரகசியமாகவே வைத்திருந்தாகவும் அனால் தற்போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் நாடாளுமன்றதின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக தற்போது எதிர்கட்சியை அச்சுறுத்தும் வகையில் செய்படுவதாக கஜேந்திரகுமார் குறிப்பிட்டுள்ளார்.

## குருந்தூர் மலை வழக்கு...

குருந்தூர் மலை ஆதி சிவன் கோவில் வழக்கு இன்றையதினம்(27.04.2023) முல்லைத்தீவு நீதிமன்றுக்கு வரும் நிலையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

பிடுங்கப்பட்ட திரிசூலம் மீள நிறுவப்பட்டு ஆதி சிவன் கோவில் வழிபாட்டுரிமையை மீளபெற வழிவகை கோர வேண்டும்.

இதேவேளை அகழ்ந்தெடுக்கப்பட்ட எட்டுப்பட்டை தாரா வகை சிவலிங்கம் ஏன் மேலதிக ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை என அறிந்துகொள்ள வேண்டும்.

அந்த திரிசூழத்தை சேதப்படுத்தி 3 துண்டாக உடைத்து சட்டவிரோதமாக அமைத்த தாதுகோபுரத்தின் உச்சியில் பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பாக தொல்லியல் திணைக்களம் உரிய விளக்கம் தர வேண்டும்.

அதேநேரம் மேற்படி விடயங்களை நாடாளுமன்றில் முல்லைத்தீவு தொகுதி வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆழமாக வலியுறுத்தி அரசிடம் உடனடி தீர்வை தர வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு...

அரசினால் தற்போது முன் வைக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப்படும் ஊடகத்துறை மிக மோசமாக நசுக்கப்படும் என்ற அச்சம் காணப்படுகிறது.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தங்களது கடமைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். எனவே குறித்த சட்டமூலத்திற்கு எதிராக குரல கொடுக்க அனைவரையும் ஒன்றிணையுமாறு கிளிநொச்சி ஊடக அமையும் அழைப்பு விடுத்துள்ளது.

இச் சட்ட மூலம் சட்டமாக்கப்பட்டு நடைமுறைக்கு வருகின்ற போது மக்களின் உரிமைகள் சார்ந்து செய்திகள், கட்டுரைகள் எழுதுவது, முகநூல்களில் பதிவுகள், கருத்துக்கள் தெரிவிப்பது, ஜனநாயகத்தின் அடிப்படையில் போராட்டங்களை மேற்கொள்ளவது என அனைத்து ஜனநாயக செயற்பாடுகளும், கேள்விக்குள்ளாகும்.

எனவேதான் குறித்த சட்ட மூலத்திற்கு எதிராக எதிவரும் 29.04.2023 அன்று கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக காலை 9 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு போராட்டத்தில் சிவில் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என அனைவரையும் கலந்துகொண்டு வலுச்சேர்க்குமாறும் கிளிநொச்சி ஊடக அமையம் அழைப்பு விடுத்துள்ளது.

## குருந்தூர்மலையில் நீதிம...

இதன்போது அவ்வாறு நீதிமன்ற கட்டளைகளை மீறி கட்டுமானப்பணிகள் எதுவும் நடக்கவில்லை என தொல்பொருள் திணைக்களம் மற்றும் அரச சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

இதனை ஆலய தரப்பு சட்டத்தரணிகள் எதிர்த்திருந்த நிலையில் பல மணி நேர வாத விவாதங்களின் பின்னர் நீதிபதி ரி.சரவணராஜா 04- 07- 2023 அன்று குருந்தூர் மலைக்கு நேரடியாக சென்று நிலமைகளை பார்வையிட்ட பின்னர் கட்டளை வழங்க வழக்கு விசாரணைகளை ஆடி மாதம் நான்காம் திகதிக்கு தவணையிட்டுள்ளார்

குறித்த விடயம் தொடர்பில் குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சால்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளில் ஒருவரான எஸ். தனஞ்சயன் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் யசுஃ673ஃ18 எனும் குருந்தூர் மலை தொடர்பான வழக்கானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே, விளக்கத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிமன்றால் வழங்கப்பட்ட இரண்டு கட்டளைகளுக்கு எதிராக மேம்படுத்தல் வேலைகள் எவையும் கட்டுமான வேலைகள் எவையும் செய்யக்கூடாது என்ற கட்டளை நீதவான் நீதிமன்றிலே ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது . இந்த நீதிமன்றக்கட்டளைகளை மீறி தொல்பொருள் திணைக்களத்தினால் விகாரைக் கட்டுமானங்கள் நினைவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நாங்கள் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பணம் செய்திருந்தோம். அந்த சமர்ப்பணத்திலே மேம்படுத்தல் வேலைத்திட்டங்கள் தொடர்பான சான்றுகளை புகைப்படங்கள் ஊடாகவும் நாங்கள் வெளிக்காட்டியிருந்தோம் அது தொடர்பாக பதிலை வழங்குவதற்காக ஏப்ரல் 27ஆம் திகதி குறித்த வழக்கானது திகதி குறிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்றைய தினம் (27) தொல்பொருள் திணைக்களத்தின் சார்பில் சிரேஷ்ட அரச வாதிகள் நீதிமன்றிலே தோன்றி சமர்ப்பணங்களை செய்திருந்தனர் அதிலே குறிப்பிட்ட கட்டுமானம் சட்டவிரோதமாக மேற்றுக் கொள்ளவில்லை என தெரிவித்திருந்தனர்.

ஆனால் இதனை எதிர்த்து நாங்கள் குறித்த கட்டுமானம் சட்டவிரோதமானது என எமது கவனத்தை தெரிவித்தோம் இது தொடர்பாக கட்டளை வழங்கிய நீதிமன்றமானது குறித்த இடத்துக்கு மீள கள விஜயம் மேற்கொண்டு அந்த கள விஜயத்தின் அடிப்படையில் குறித்த மேம்படுத்தல் வேலைகள் இடம்பெற்றனவா சட்டவிரோத செயற்பாடுகள் நீதிமன்ற கட்டளையை அவமதித்து இடம்பெற்றனவா என்பது தொடர்பாக தீர்ப்பளிப்பதற்காக ஏழாம் மாதம் நான்காம் திகதிக்கு தவணையிடப்பட்டது என்றார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிஹாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதாக குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயதினர் சார்பில் 02.03.2023 அன்று நீதிமன்றில் முறையீடு ஒன்று செய்யப்பட்டது.

இந்நிலையில் குருந்தூர்மலை விவகாரத்தில் அவ்வாறு நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு காவல்துறையினர் மற்றும், தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்பினர் 30.03.2023 ஆம் திகதியன்று நீதிமன்றில் தோன்றி தமது அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரணராஜா உத்தரவிட்டிருந்தார். அதற்கமைய குறித்த வழக்கானது முல்லைத்தீவு 30.03.2023 அன்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது தொல்லியல் திணைக்களம் சார்பில், தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்க உள்ளிட்ட குழுவினரும், காவல்துறையினரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது தமது சிரேஸ்ர சட்டத்தரணிகளும், சிரேஸ்ர அலுவலர்களும் நீதிமன்றிற்கு வரமுடியாத காரணத்தினால், தமது விளக்கங்களைச் சமர்ப்பிப்பதற்கு மற்றுமொரு தவணையினை வழங்குமாறு காவல்துறையினரும், தொல்பொருள் திணைக்களம் சார்ந்தவர்களும் நீதிமன்றிடம் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந் நிலையில் குருந்தூர்மலைப் பிரதேசத்திலே நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த விஹாரைக்குரிய கட்டுமானப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதானது, நீதிமன்றத்தை அவமதித்து இடம்பெறுகின்ற செயற்பாடு என, குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்தோடு பொதுமக்கள் நீதிமன்றின் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கக்கூடியதொரு செயற்பாடு எனவும் இதன்போது ஆலய நிர்வாகம் சார்பான சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை குறித்த குருந்தூர் மலைப் பிரதேசத்திற்கு நீதவான் நேரடியாக வருகை தந்து அங்கு இடம்பெறும் விடயங்களை பார்வையிட்டு, ஏற்கெனவே இருந்த நிலையை விட புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா, அல்லது மேம்படுத்தல் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதனைப் பார்வையிட்டு, அதனடிப்படையில் வலிதான கட்டளை ஒன்றினை வழங்கவேண்டுமெனவும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளால் வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டது.

அதனடிப்படையில் இருதரப்பு சமர்ப்பணங்களைத் தொடர்ந்து தொல்லியல் திணைக்களம் மற்றும், காவல்துறையினர் அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்காக இன்றைய தினத்துக்கு தவணையிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் செய்திகள்

விளம்பர
தொடர்புகளுக்கு
021 221 7557
Mobile : +94 76 567 3339






## "தூவானம்" என்னும் வரலாற்று திரைப்படம்

கடந்த 03.01.2023 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சர்வ தேச திரைப்பட விழாவில் திரையிடப்படுவதற்கு தெரிவு செய்து திரையிடப்பட்டு, தொடர்ந்து ஒரே நாளில் (18.02.2023) அன்று யாழ் ராஜா திரையரங்கிலும், பருத்தித் துறை sss திரையரங்கிலும், கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலும், மட்டக்களப்பு சுகந்தி திரையரங்கிலும், திருகோணமலை சரஸ்வதி திரையரங்கிலும், திரையிடப் பட்டுத, அதன்பின் கொழும்பு றொஸ்சி திரையரங்கிலும், சில கிராமங்களிலும், பாட சாலைகளிலும் தொடர்ந்து இரண்டு மாதங்களாக காட்ச்சி படுத்தப்பட்டு வருவது பெரு மகிழ்ச்சியான விடயம் அதை சொல்லி எழுச்சி படுத்த வேண்டும் என்றே எழுதுகி றேன் இத் திரை விமர்சனத்தை.

# திரை விமர்சனம்

"தூவானம்" என் மனதுக்குள் இன்னும் தூறிக்கொண்டடே இருக்கிறது. அதை அடுத் தவர் மனங்களுக்கு காவிச் செல்ல வேண்டும் என்றுறே பொறுப்புடன் எழு துகிறேன். கூத்தும் அந்த கூத்துக்குள்ளே எம்மவர் கதைகளை கோர்த்தும் காட்டியே நிற்கிறது, 30 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற போரும், அந்தப் போரினால் எங்கள் ஊரில் ஏற்பட்ட இழப்பும் இன்றும் முடியாத தொடர்கதையாகவே நீண்டு செல்கிறது,

ஆண்ட மண்ணிலே ஏன் எமக்கு இந்த நிலையோ...மீண்டும் நிமிந்து செல்ல என்ன வழியோ... சொல்லிக் கொண்டே செல்கிறது இத் திரைக் காவியம்.போரினால் தன் ஊரை விட்டுப்புலம் பெயர்ந்து சென்றவனும், அந்தப் போருக்குள்ளே இருந்து கொண்டு தன் ஊரைப் பற்றி சிந்தித்தவனும், சந்தித்த சவால்களையும் சிந்தித்த செயல்களையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறார் இத்திரைப்படத்தின் கதாசிரியர் Dr. சிவன்சுதன் அவர்கள்.

பாடலுக்கேற்ற வரிகளும் வரிகளுக் கேற்ற இசைகளும், பெற்ற வலிகளையும் கற்ற வளிகளையும் சொல்லி நிற்கிறது. பள்ளிப் பருவ காலத்தையும் ஒரு பாட்டுக்குள் ளேயே காட்டி இருக்கிறார். இத்திரைப்படத்தின் இயக்குனர் கலாநிதி ரதிதரன் அவர் கள் கால வெள்ளத்தில் அள்ளுண்டு போன வரலாற்று ஆவணங்கள் சிலவற்றை திரைக்கதைக்கு ஏற்றால் போல் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தி கண் கலங்க வைக்கிறார்.

சில இடங்களில் கலகலப்பாக கதையை நகர்த்ததி சிரிக்கவும் வைக்கிறார். சிந்திக் கவும் வைக்கிறார். சுருக்கமாக சொன்னால் கலையும் இருக்கிறது, சிலையும் இருக் கிறது, மணல் மலையும் இருக்கிறது. வலியும் இருக்கிறது, வாழவேண்டிய வழியும் இருக்கிறது மொழியும் இருக்கிறது தாட்டுவைத்த குழிக்குலும் எதோ இருக்கிறது.... **மொத்தத்தில் இத் திரைப்படம் படமல்ல.... நாங்கள் நடந்துவந்த தடயங்கள்....**

இத் திரைப் படத்தை ஒளிப்பதிவு செய்த பால முகுத்தன் இன்னும் அழகாக செய் திருக்க வேண்டும், படத்தொகுப்பு செய்த பிரபு அவர்கள் பாராட்டப்பட வேண்டிய வரே... வாழ்க வளர்க... கலை பணியாற்றிய கலைஞர்கள் அனைவரும் இனும் இன்னும் உயர்க உயரத்தையும் விஞ்சி உச்சத்தை தொடுக..



ஆர்வலன் ■ சினிமா - திரை விமர்சனம்

# இசை நிகழ்வில் பங்கேற்கும்

## இந்தியக் கலைஞர்களின் யாழ். வருகை





யாழ்ப்பாணத்தில் நாளை (28.04.2023) இடம்பெறவுள்ள இசை நிகழ்வில் பங்கேற் கவுள்ள இந்தியக்கலைஞர்கள் இன்று மதி யம் பலாலி விமான நிலையம் ஊடாக இலங் கையை வந்தடைந்துள்ளனர்.

இந்தக் குழாமில் விஜய் டி.வி. சூப்பர் சிங்கர் புகழ் பாடகர்களான சாம் விஷால், ஸ்ரீதர் சேனா, மூக்குத்தி முருகன், மானசி, ஹரி பிரியாவுடன் கலக்கப்போவது யாரு புகழ் காமெடி நடிகர் குரேஷியும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் பங்கேற்கும் மாபெரும் கலை நிக ழ்வு நாளை மாலை யாழ். முற்றவெளி திற ந்த அரங்கில் நடைபெறவுள்ளமை குறிப்பிட த்தக்கது.

யாழில் **Aaraa Entertainment** பெருமையு டன் வழங்கும், வணக்கம் **jaffna** பிரம்மா ண்ட இசை மற்றும் நகைச்சுவைக் கொண் டாட்டம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு யாழ் முற்றவெளி மைதானத் தில், நாளை ஏப்ரல் 28 ஆம் திகதி மாலை 5 மணி முதல் நடைபெறவுள்ளது.

நிகழ்வுகள் ■ யாழ்ப்பாணம்

